# அத்தியாயம் 8

## இலங்கையின் வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல்

### இலங்கையின் மானிட இடைத்தொடர்புகளின் விளைவுகளான வியாபாரம் போக்குவரத்து தொடர்பாடல் விருத்தி

இலங்கையில் பண்டையகாலத்தில் தன்னிறைவுப் பொருளாதாரம் நிலவியது. தமக்குத் தேவையானவற்றைத் தாமே உற்பத்தி செய்து கொண்டார்கள். மேலதிக உற்பத்திகளை பண்டமாற்றுமுறை மூலம் தமக்குள் பரிமாறிக்கொண்டார்கள்.

காலப் போக்கில் சனத்தொகைப் பெருக்கத்துடன் தேவைகள் விரிவடைந்து கேள்வி அதிகரித்தது. மேலதிக உற்பத்தியை விற்பனை செய்வதற்குப் போட்டியிட வேண்டி ஏற்பட்டதால் போக்குவரத்தினதும் தொடர்பாடலினதும் உதவி தேவைப்பட்டது. உள்நாட்டில் பல்வேறு மக்கள் பிரிவுகளுக்கிடையில் பிரதேச ரீதியான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல் சேவைகள் உதவின.

இன்றைய காலகட்டத்தில் வர்த்தகத்தையும் போக்குவரத்தையும் இணைக்கும் காரணியாக தொடர்பாடல் காணப்படுகின்றது என்பதில் ஐயமில்லை.மனிதர்களின் தேவைகள் விரிவடைவதற்கும் வர்த்தகம் போக்குவரத்து நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்துவதற்கும் தொடர்பாடல் உதவுகின்றது.


## 8.1 இலங்கையின் வர்த்தகம்

இலங்கையில் நிலவும் வர்த்தக முறையினை இரு வகையாகப் பிரிக்கலாம்.

இலங்கையின் வர்த்தகம்


- உள்நாட்டு வர்த்தகம்
- வெளி நாட்டு வர்த்தகம்

### இலங்கையில் உள்நாட்டு வர்த்தகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்




இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் காட்டப்படும் காரணங்களுக்கு மேலதிகமாக தற்காலத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியும் தகவல்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள்

### இலங்கையில் வெளி நாட்டு வர்த்தகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்



புராதன காலத்தில் இலங்கை பெருமளவு தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்ட நாடாக விளங்கியது. பிரதேசத்தின் தேவைகளை நிறைவு செய்யுமளவுக்கு வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன. இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாக இருந்த காலத்தில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் விருத்தியடைந்ததோடு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்திலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன.

## இலங்கையின் வர்த்தக முறையின் போக்கு

| அன்று | இன்று |
|---|---|
| • நுகர்வுக்காக மட்டும் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. | • வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. |
| • வரையறைக்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள். | • கொடுக்கல் வாங்கல்கள் சிக்கார்ந்த தன்மையடைந்துள்ளது. |
| • சுயநிறைவு உற்பத்தி. பல்வேறு நாடுகளிலிருந்தும் உதவி பெறப்படுகின்றது. | • தேவைகளை நிறைவு செய்வதற்கு |
| • தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிக்கலின்மை. | • சிறந்த போக்குவரத்து தொடர்பாடல் முறைகளால் வெற்றி காணப்பட்டமை. |
| • திட்டமிடாத வர்த்தக முறை. தேவைகளைப் பொறுத்துச் சந்தை உருவாகியமை. | • வலயரீதியில் ஒப்புதலுடன் திட்டமிடப் பட்ட வர்த்தக முறை. |
| • உற்பத்திக்கு இறக்குமதி செய்யப்படும் சாதனங்களில் தங்கியிருந்தமை. | • கூட்டு ஒப்பந்த அடிப்படையில் நாடுகளுடன் இணைந்து மேற்கொள்கின்ற வர்த்தகம். |
| • சர்வதேச வர்த்தகத்திற்காக உற்பத்தி செய்யாமை. | • சர்வதேச வர்த்தகத்திற்கான பொருட்களை வழங்குவதற்கு நம்பிக்கையுடன் செயற்படுகின்றமை. |
| • பொருட்களைத் தேடுவதற்கு நேரமும் தூரமும் வீணடிக்கப்பட்டமை. | • புதிய தேவைகளை உருவாக்கிக் கொண்டு பொருட்கள் நுகர்வோனைத் தேடி வருகின்றமை. |

| | |
|---|---|
| பொருட்களைத் தேடி நுகர்வோர் நகரத்தை நாடிச் சேர்ந்தமை | நுகர்வோனைக் கவருவதற்காக பாதையின் இருமருங்கிலும் சன நெருக்கடியான கடைகளில் பொருட்கள் காத்திருத்தல் (சுப்பர் மார்க்கட்)<br><br>வெளிநாட்டு உதவிகளின் மீது அதிக நம்பிக்கையுடன் செயற்படுகின்றமை. |

**செயற்பாடு:**

1. இலங்கைதனது பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற ஐந்து நாடுகளையும் தேவையான பொருட்களை இறக்குமதி செய்கின்ற ஐந்து நாடுகளையும் உலகப்புறவுருவப்படத்தில் குறிக்குக.

2. இலங்கையின் வர்த்தகத்தோடு தொடர்புடைய சர்வதேச துறைமுகங்கள் பத்தினை உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

## சர்வதேச வர்த்தகத்தில் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினை

தேசிய சர்வதேச வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் பல நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இவை இலங்கைக்கும் பொதுவானதாகும். அவையாவன.

1. முதனிலைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைதலும் தளம்பலடைதலும்.
2. முதனிலை வர்த்தகப்பொருட்களை விற்பனை செய்வதில் உள்ள இடையூறுகள். (பிரதியீட்டுப்பொருட்களின் வருகை)
3. முதனிலைப் பொருட்களின் பெறுமதியில் பெரும் பகுதி மீண்டும் அபிவிருத்தி யடைந்த நாடுகளைச் சென்றடைதல்.
4. பொருளாதார வலுக் குறைபாடு. (வெளிநாட்டு நாணய பற்றாக்குறை)
5. அபிவிருத்தி அடைந்த நாடுகள் உயர்ந்த சுங்க வரிகளை விதித்தல், கோட்டா முறையில் இறக்குமதிக்கு அனுமதி அளித்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல்.
6. ஏற்றுமதிப் பொருட்களுக்கான நியாயமான விலை கிடைக்காமை.
7. இலங்கை இறக்குமதி செய்கின்ற உற்பத்திப் பொருட்களின் விலைகள் உயர்வடைதல்.
8. பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கம்.

**செயற்பாடு:**

1. வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக அண்மைக் காலத்தில் இலங்கை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிரச்சினைகளை விளக்குக.

## வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்கின்ற நடவடிக்கைகள்

- ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல்.
- வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வெளிநாட்டு உதவிகளைப் பெறுதல்.

## 8.2 இலங்கையின் போக்குவரத்து

பண்டைய காலத்தில் மக்கள் தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் பயணம் செய்தார்கள். அக்காலத்தில் மக்கள் தொகை குறைவாகவும் அவர்களின் தேவைகள் குறைவாகவும் இருந்ததால் போக்குவரத்து சேவை அதிகளவில் வளர்ச்சியடைந்து காணப்படவில்லை.

இலங்கையில் ஐரோப்பியர்களின் வருகையைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறையில் மாற்றங்கள் ஏற்பட்டன.போர்த்துக்கேயர் காலத்தில் அதிகளவு மாற்றங்கள் இல்லாவிடினும் ஒல்லாந்தர் காலத்தில் கால்வாய்கள் அமைக்கப்பட்டு நீர்வழிப்போக்குவரத்து அதிகரித்தது. இக்கால்வாய்கள் கரையோரப்பிர தேசங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

பிரித்தானியர் வருகையின் பின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப் பட்டது. அந்த உற்பத்திகளை கொழும்புத் துறைமுகத்திற்கு கொண்டுவருவதற்காக பெருந்தெருக்களும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டன. பிரித்தானியரால் அமைக்கப்பட்ட இப்பாதைகளை சிறு மாற்றங்களுடனும் நவீன மயப்படுத்தியும் இன்றும் பயன்படுத்தி வருகின்றோம்.

வகுப்பறையொன்றில் புவியியல் பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அதிபரின் அவசர அழைப்பின் பேரில் புவியியல் ஆசிரியர் வகுப்பறையை விட்டு வெளியே செல்ல வேண்டி ஏற்பட்டது. எனவே அவர் மாணவர்களுக்கு கீழே தரப்பட்ட வினாக்களை வழங்கி விட்டு அவற்றிற்கான விடைகளை எழுதுமாறு பணித்து விட்டுச் சென்றார்.

# இலங்கையின் போக்குவரத்து வலயமைப்பு




A1Sp கொள்ளுப்பிட்டி - பாராளுமன்றம் (9)
A1 கொழும்பு - கண்டி (116)
A2 கொழும்பு - காலி - அம்பாந்தோட்டை - வெள்ளவாய (318)
A3 பேலியகொடை - புத்தளம் (128)
A4 கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - பொத்துவில் - மட்டக்களப்பு (430)
A5 பேராதனை - நுவரெலியா - பதுளை - செங்கலடி (283)
A6 அம்பேபுஸ்ஸ - குருநாகல் - தம்புல்லை - திருகோணமலை (192)
A7 அவிசாவளை - நுவரெலியா (120)
A8 பாணந்துறை - இரத்தினபுரி (68)
A9 கண்டி - தம்புல்லை - இறம்பாவை - மதவாச்சி - வவுனியா - யாழ்ப்பாணம் (318)
A10 கட்டுகஸ்தோட்டை - குருநாகல் - புத்தளம் (125)
A11 மரதன்கடவலை - பொலன்னறுவை - திருக்கண்டிமடு (126)
A12 புத்தளம் - அநுராதபுரம் - திருகோணமலை (179)
A13 அநுராதபுரம் - கல்குளம் (10)
A14 மதவாச்சி - தலைமன்னார் (110)
A15 மட்டக்களப்பு மூதூர் திருகோணமலை (137)
A16 பேரகலை - பண்டாரவௌ - ஹாலிஎல (39)
A17 காலி - இறக்குவானை - மாதம்பை (144)
A18 பெல்மதுளை - நோணாகமம் (86)
A19 பொல்கஹவெலை - கேகாலை (11)
A20 அநுராதபுரம் - றம்பாவை (14)
A21 கேகாலை - கறவனெல்லை (42)
A22 பஸ்ஸறை - மொனறாகலை (34)
A23 வெள்ளவாய - கும்பல்வெலை (30)
A24 மாத்தறை - அக்குரஸ்ஸ (20)
A25 சியம்பலாண்டுவை - அம்பாறை (56)
A26 கண்டி - படியத்தலாவை (104)
A27 அம்பாறை - மகா ஓயா (56)
A28 அநுராதபுரம - கல்கமுவ - பாதெனிய (85)
A29 வவுனியா- ஹொறவுப்பொத்தானை (45)
A30 வவுனியா - பறையனாலங்குளம் (35)
A31 காரைதீவு - அம்பாறை (24)
A32 நாவற்குழி - மன்னார் (98)
A33 ஜா.எல - யக்கலை (37)
A34 மாங்குளம் - முல்லைத்தீவு (48)
A35 பரந்தன் - முல்லைத்தீவு (53)

தேசப்படம் 8.1

**செயற்பாட்டுப் பத்திரம்**

போக்குவரத்து என்றால் என்ன?
போக்குவரத்து ஏன் அத்தியாவசியமானது?
போக்குவரத்துக் கோலத்தினை வரைபடமொன்றின் மூலம் காட்டுக.

செயற்பாட்டு பத்திரத்தின் அடிப்பிடையில் மாணவர் கணிப்பீட்டு செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் பொழுது அந்த வகுப்பறைக்கு வந்த ஒரு புவியியல் ஆலோசகர் மாணவர்கள் விடையளிப்பதற்கு உதவி புரிந்தார்.

1. போக்குவரத்து என்பது
   "பண்டங்களும் மக்களும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லப்படுவது ஆகும்"
2. போக்குவரத்து சேவை அவசியமாவது ஏன்?
   - I மனிதர்களின் தேவைகள் பிரதேச மட்டத்திலே பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால்
     உ- ம்: கல்வி, பாதுகாப்பு, உணவு.
   - II வளங்களின் சமமின்மை காரணமாக இறக்குமதி செய்ய வேண்டி இருத்தல்.
     உ-ம்: நிலக்கரி,கனிய நெய் போன்ற எரிபொருட்கள்.
   - III. தமது பொருளாதார நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தமது வதிவிடங்களிலிருந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டியிருத்தல்.
     உ- ம்: வேலைத்தளங்கள், கைத்தொழில் உற்பத்தி மையங்கள்.
   - IV. உற்பத்தி மையங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும்,முடிவுப்பொருட்களை சந்தைக்கு கொண்டு வருவதற்கும்.
   - V. விவசாய உற்பத்திகளைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்லல்,
   - VI. ஆய்வு நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை போன்றவற்றிற்காக.

## இலங்கையின் போக்குவரத்துக் கோலங்கள்

போக்குவரத்து
- மக்கள்
- பண்டங்கள்

- தரை — புகையிரதம், பெருந்தெரு, சுரங்கவழி, கால்வாய் (செயற்கை)
- நீர் — கடல், கால்வாய் (இயற்கை)
- வான் — தேசிய, சர்வதேச

## இலங்கையின் பெருந்தெருப் போக்குவரத்து

பிரித்தானியர் வருகைக்குப் பின்பே இலங்கையில் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. மலையகப் பகுதியின் ஏகாந்தத் தன்மையைப் போக்குவதற்காகவும், மலையகத் தோட்ட உற்பத்திகளைத் துறைமுகத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்காகவும் பெருந் தெருக்கள் முதலில் ஆரம்பிக்கப்பட்டன.

ஆளுநர் எட்வேட் பாண்ஸ் காலத்திலேயே முதல் பெருந்தெரு கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் அமைக்கப்பட்டது. வீதியமைக்கும் பணியில் மேஜர் ஸ்கின்னர், கப்டன் டோசன் ஆகியோர் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.


தற்போது இலங்கையில் மொத்தம் 86,200கி.மீ நீளமான தெருக்கள் உள்ளன. அவற்றில் 25,466 கி.மீ நீளமான தெருக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையும் 40,600 கி.மீ நீளமான தெருக்களை உள்ளூராட்சி அதிகாரசபையும் பராமரிக்கின்றன.

இலங்கையில் பெருந் தெருக்கள் 5 வகையாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த நீளம் 25,680 கி.மீ ஆகும். பிரதான நிர்வாக வர்த்தகத் தலைநகரமான கொழும்பையும் ஏனைய மாவட்டத் தலைநகர்களையும் அடர்த்தியான குடியிருப்புப் பகுதிகளூடாக இணைக்கும் பெருந்தெருக்கள் A வகுப்பைச் சேர்ந்தவை. 35 A வீதிகள் பிரதான வீதிகளெனப் பெயரிடப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன.

875 கி.மீ நீளமான B வகை வீதிகள் பிரதான நகரங்களை இணைக்க உதவுகின்றன. B வகுப்பில் 75 வீதிகள் உள்ளன. சிறு வீதிகள் C,D,E என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முக்கிய தெருக்களில் கிலோமீற்றர் கற்களைக் காணலாம் அதில் இலக்கங்களும் கீழே எழுத்தும் இலக்கமும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

பிரதான பாதைகளில் நாட்டப்பட்டுள்ள கீ. மீ கம்பங்களின் கீழ் பகுதியில் குறியீடுகளும் எழுத்துக்களும் இலக்கங்களும் பொறிக்கப்பட்டுள்ளது ஏன்?



இது தவிர பதவிக்கு வந்த அரசாங்கங்கள் போக்குவரத்து துறையை விருத்தி செய்ய பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. கொழும்பு கட்டுநாயக்கா பெருந்தெரு, கொழும்பு மாத்தறை பெருந்தெரு போன்றவை அதிவேக நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. புதிய வீதிகளை அமைத்தல், பிரயாணிகளுக்கான மேம்பாலங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைள் மூலம் அதிகரிக்கும் போக்குவரத்து சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முறைமையான பெருந்தெருக்கள் அமைப்பு பிரித்தானியரால் 1820 இல் கொழும்பிலிருந்து கண்டி வரை ஆரம்பிக்கப்பட்டது. 1821 இல் கலகெதர கணவாய் ஊடாக குருணாகல் வரை அப்பாதை நீடிக்கப்பட்டது.

## இலங்கையின் பெருந்தெருக்களின் அமைப்பு

| பெருந்தெரு வகை | பெயரும் தன்மையும் | தொடர்பு | நீளம் | அகலம் | வீதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| A | கல், தார், காபெட் | மாவட்டம் மாகாணம் நகரம் | 4219 | 8-12 | 35 |
| B | கல்லும் தாரும் காபெட்பண் ணியும் பண்ணாமலும் | பிரதான நகரங்கள் | 7674 | 4-6 | 75 |
| C | கல், தார் (Cerpet) | பிரதான வீதிகளை இணைத்தல் | 10949 | 4 | ✦ |
| D | கல்,மண் சார்ந்த வீதி | கிராமங்களுக் கூடான வீதி | 6121 | ஒரு வாகனம் மட்டும் செல்லுவது | ✦ |
| E | மணற்பாதை | கிராமங்களை ஊடறுக்கும் | ✦ | ஒரு வாகனம் மட்டும் செல்லக் கூடியது. | ✦ |

✦ கணக்கிடப்படவில்லை

மூலம்: இலங்கை நில அளவைத்திணைக்களம் பாடசாலைக்கான தேசிய தேசப்படம் புத்தகம்

## புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள்

ஆசிய பசுபிக் பொருளாதார சமூக ஆணைக்குழுவானது ஆசியாவின் பிரதான தலைநகரங்கள் அனைத்தையும் முக்கிய பொருளாதார மையங்களையும், கைத்தொழில் மையங்களையும், சர்வதேசக் கொள்வனவு இறங்கு துறைகளையும் இணைக்கும் ஆசிய நெடுஞ்சாலைக்கான விரிவான திட்டங்களைத் தீட்டியுள்ளது. இதில் ஒரு பகுதியாக ஏறக்குறைய 1200 கி.மீ நெடுஞ்சாலைகளை இலங்கை

நிர்மாணிக்கும். இதற்காக ஒரு தரைப்பாலம் தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடப்பட்டுவருகிறது.

## இலங்கையின் புகையிரதப் போக்குவரத்து

புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்டமை போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மற்றுமொரு முக்கியமான வளர்ச்சிக் கட்டமாகும்.இலாபமான துரிதமான போக்குவரத்து சேவையான புகையிரத சேவையை பிரித்தானிய ஆளுநர் ஹென்றி வோட் இலங்கையில் ஆரம்பித்தார்.

மக்கள் பயணம் செய்வதற்கும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதைவிட புகையிரத சேவை இலாபகரமான தொன்றாகும். பிரித்தானியராட்சிக்காலத்தில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே முதலில் புகையிரதப் பாதைகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று திறைசேரி கடனுதவியைச் சார்ந்திருக்கும் சேவையாக இது காணப்படுகின்றது. கொழும்பை மையமாகக்கொண்டு பல திசைகளிலும் புகையிரதப் பாதைகள் விரிந்து செல்கின்றன.முன்பிருந்த அவிசாவளை - ஒப்பநாயக்கா,நானுஓயா - நுவரெலியா புகையிரதப்பாதைகள் இன்று நீக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் மொத்தம் 1453கி.மீ நீளமான புகையிரதப் பாதைகள் உள்ளன. அவற்றில் 1394 கி.மீ நீளமான புகையிரதப் பாதைகள் அகலமானவை எஞ்சிய 59கி.மீ நீளமான புகையிரதப் பாதைகள் ஒடுக்கமானவை.


## இலங்கையில் புகையிரதப் பாதைகளின் வளர்ச்சி

1858 1863 கொழும்பு - கண்டிப் புகையிரதப்பாதை
1871 பேராதனை - நாவலப்பிட்டிப் புகையிரதப்பாதை
1885 பாணந்துறை - மாத்தறைப் புகையிரதப்பாதை
1899 நாவலப்பிட்டி பண்டாரவளை புகையிரதப்பாதை
1905 பொல்காவெல - குருணாகல் - அநுராதபுரம் யாழ்ப்பாணம் புகையிரதப் பாதை
1907 கொழும்பு - புத்தளம் புகையிரதப் பாதை
1912 கொழும்பு - இரத்தினபுரி புகையிரதப் பாதை

புகையிரத சேவையின் முக்கியத்துவத்தை பின்வரும் விடயங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

- அரச துறையின் பொருட்களையும் பண்டங்களையும் ஏற்றிச்செல்லும் முக்கிய துறை இதுவாகும். (எண்ணெய், உணவுப்பண்டங்கள், உரம்,. அலுவலக புகையிரதச் சேவை)
- புகையிரத சேவையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தேசப்படம் 8.2




1. கொழும்பு - அவிசாவளைப் பாதை அகலமாக்கப்பட்டுள்ளமை.
2. 1993 இல் அநுராதபுரத்துக்கும் மிகிந்தலைக்குமிடையே புதிய புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டமை.
3. மாத்தறைக்கும் கதிர்காமத்திற்கு மிடையே புதிய சேவையினை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளமை. மாத்தறை - திக்வெல்லைக்கிடையே இதற்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.
4. கொழும்பு கண்டிக்கிடையே உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக் கான "ஹித்தாச்சி" என்ற பெயருடைய துரித புகையிரத சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளமை.
5. நகரங்களுக்கிடையிலான துரித புகையிரத சேவை.

இலங்கையின் புகையிரத சேவை நிர்வாகம், ஊழியர் சார்ந்த பிரச்சினைகள் என்பன காரணமாக திறனற்ற சேவையாக பொது மக்களின் வெறுப்புக்கு உள்ளாகியுள்ளது.

## இலங்கையின் போக்குவரத்துப் பிரச்சினைகள்

- போக்குவரத்து நெருக்கடி.
- பயணிகள் குறித்த நேரத்தினுள் உரிய இடத்தைச் சென்றடைய முடியாமை.
- அரச கொள்கைகளிலுள்ள குறைபாடுகள்.
- புகையிரதப் பெருந்தெருக்கள் இணைந்த போக்குவரத்திலுள்ள குறைபாடுகள். கனரக வாகனங்களுக்கு ஏற்ற பாதைகள், பாலங்கள் இன்மை.
- மழைக்காலத்தில் வீதிகள் வெள்ளத்தில் மூழ்குவதும் மண்சரிவிற்கு உட்படுவதும்.
- பாதைகளின் அகலம் போதாமை.
- வீதிச் சட்டங்களை உரிய முறையில் பின்பற்றாமை.
- முகாமைத்துவக் குறைபாடு.
- வீதிகள் உரிய முறையில் பராமரிக்கப்படாமை.

## இலங்கை போக்குவரத்துத்துறையின் நவீன போக்கு

- சுரங்கப்பாதை மேம்பாலம் போன்ற மாற்று வழிகளை அமைத்தல்.
- அதிவேக நெடுஞ்சாலைகளை அமைத்தல்.
- புகையிரத, பெருந்தெருக்கள் இணைந்த சேவை.
- போட்டி முறையிலான தனியார் துறையின் பங்களிப்பு.
- கொள்கலன் முறையின் முன்னேற்றம்.
- கிராம எழுச்சி அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் வீதிப்புனரமைப்பும் புதிய வீதிகளை அமைத்தலும்.
- மாற்று நுழைவுப் பாதைகள் அமைத்தல்.

மேலே கூறப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு முறைகளைப் பின்பற்றி வந்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகள் மூலம் இவ்வாறான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

**2004 புள்ளிவிபரப்படி**
**பெருந்தெருக்களின் நீளம் - 92,700 கி.மீ**
**பிரதான வீதி - 28,100 கி.மீ**
**பாதைகளின் பரப்பளவு - 5.2 சதுர கி.மீ.**
**புகையிரதப்பாதையின் நீளம் - 1640 கி.மீ.**

மூலம்: இணையத்தளம்: http/fo.worldbank.org/zgslc4cl60

**செயற்பாடு:**

இலங்கைப் படத்தை அவதானித்து
1. மழை வெள்ளத்தில் மூழ்கும்
2. மண் சரிவுக்கு உட்படும்
3. நிலத்துள் அமிழ்ந்து போகும்

பாதைகளையும் அவை காணப்படும் மாவட்டங்களையும் பட்டியலிடுக.

## விமானப்போக்குவரத்து

1. உள்நாட்டு விமானசேவை


ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கும் நாட்டினுள்ளேயும் விரைவாகப் பிரயாணம் செய்வதற்கும் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் ஆகாய விமானம் பயன்படுகின்றது. போக்குவரத்துத்துறையில் விமான சேவையும் ஒரு பிரதான பங்கினை வகிக்கின்றது.

இலங்கையில் 1932ம் ஆண்டு “எயர் சிலோன்” என்னும் தேசிய விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அது 1979 இல் “எயர் லங்கா” என்னும் சர்வதேச விமான சேவையாக மாற்றப்பட்டது.

2. சர்வதேச விமானசேவை

விமான நிலையங்களின் நிர்வாகத்திற்கு வசதியாக இலங்கை விமான நிலைய அதிகார சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தற்பொழுது இருபதிற்கும் மேற்பட்ட நாடுகளுடன் விமான சேவை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 12 உள்நாட்டு விமான நிலையங்கள் காணப்படுகின்றன. 2007 இல் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வீரவில என்னுமிடத்தில் சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1961ம் ஆண்டில் கனேடிய நாட்டின் உதவியுடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டது. இது பெரிய விமானங்கள் வந்துபோவதற்கு வசதியாக 1970களில் திருத்தியமைக்கப்பட்டது.

விமான சேவைக் கட்டணம் அதிக அளவில் இருப்பதாலும் நாட்டில் நிலவுகின்ற பாதுகாப்பற்ற நிலைமை காரணமாகவும் பொதுமக்கள் இச்சேவையை அதிகம் பயன்படுத்துவதில்லை. வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் நிகழும் காலங்களிலும் நாட்டின் பாதுகாப்புக்காகவும் இச்சேவை அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.



தேசப்படம் 8.3 இலங்கையின் விமான நிலையங்கள்

### செயற்பாடு

1. விமானப்போக்குவரத்தினால் கிடைக்கப்பெறும் நன்மை தீமைகள் .
2. விமானப்போக்குவரத்து நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய முடியுமா?
3. சர்வதேச விமான போக்குவரத்து சேவையோடு இலங்கையின் விமான சேவை போட்டியிட முடியுமா?

மேற் கூறப்பட்ட தலைப்புகளின் கீழ் விவாதங்களை நடாத்துக:

## இலங்கை கப்பல் போக்குவரத்து

இலங்கையின் புவியியல் அமைவும் பிரதான சர்வதேச கடல் மார்க்கங்களின் மத்தியில் அமைந்துள்ளமையும் இலங்கை கடற் பிரயாணம் சார்ந்த சேவைகளுக்குப் பொருத்தமான ஒரு நிலையமாகவுள்ளது. கொழும்புத் துறைமுகம் தெற்காசிய வலயத்தில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறைமுகம் ஆகும்.

இலங்கையில் கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய மூன்று முக்கியமான துறைமுகங்கள் இருக்கின்ற போதிலும், பிற நாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தவரை கொழும்புத் துறைமுகமே மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இது சர்வதேச கப்பல்களுக்கு ஒரு சேவை நிலையமாகவும் பொருள்களை மீளக் கப்பலேற்றுவதற்குரிய ஒரு நிலையமாகவும் விளங்குகின்றது.

சிப்பங்கட்டுதல் என்பது குறிப்பாகத் துறைமுகங்களில் காணப்படும் நெருக்கடியை போக்குவதற்கும் செயற்பாட்டுச் செலவைப் பெரிதும் குறைப்பதற்கும் வகுக்கப்படும் ஒரு நுணுக்க முறையாகும்.துரிதமாக வளர்ந்து வருகின்ற கொள்கலன் காவுகை முறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கொழும்புத் துறைமுகத்திலேயே முதலாவதாக வசதிகள் செய்யப்பட்டன. 1981இல் வகுக்கப்பட்ட பிரதான துறைமுக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 300 மீற்றர் நீளமான கொள்கலன் தளம் ஒன்று கட்டப்பட்டது. எனினும் வருங்கால மேலதிக தேவைகள் கருதி மேலும் ஒரு 300 மீற்றர் நீளமான தளம் சகல வசதிகளுடன் 1987இல் அமைக்கப்பட்டது.


துறைமுகத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக 1979 இல் இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது. 2007இல் அம்பாந்தோட்டையில் சர்வதேச துறைமுகம் ஒன்றை அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுக நகரஅபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய துறைமுகத்தைச் சுற்றி 25,000 இற்கு மேற்பட்டோருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1. ஏற்றுமதி இறக்குமதி
2. மீளக்கப்பலேற்றல்
3. சேவை வசதிகளை வழங்கல்
4. பழுது பார்த்தலும் திருத்துதலும்
5. விரைவானதும் வினைத்திறன்மிக்கதுமான கொள்கலன் பணிகள்

ஆகிய விடயங்கள் காரணமாக இலங்கையின் கப்பற் சேவை உலகப் பிரசித்தி பெற்றதாகவும் வெளிநாட்டு வருமானத்தைப் பெற்றுத்தரும் சேவையாகவும் அமைந்துள்ளது.

தேசப்படம் 8.4 இலங்கையின் துறைமுகங்கள்




**மீன்பிடித் துறைமுகங்கள்:** இலங்கை ஒரு தீவாக இருப்பதனாலும் இலங்கையைச் சுற்றி உள்ள கடற்கரையோரங்களில் மீன்பிடிக் கைத்தொழில் முக்கிய நடவடிக்கையாக இருப்பதாலும் கடல் வளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக.

உரு 8.1 கொழும்புத் துறைமுகம்



## கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம்

1. கப்பல்கள் தங்கிச் செல்லும் வசதி கொண்டிருக்கிறது.
2. அதன் பரப்பளவு 2.6 சதுர கிலோ மீற்றராகும்.
3. இலங்கையின் முழுஏற்றி இறக்கலில் 92% மானவை கொழும்புத் துறைமுகத்தினூடாகவே நடைபெறுகின்றது.
4. பருவக்காற்றுக் காலங்களில் பாதுகாப்பாக நங்கூரமிடக்கூடியது.
5. வருடம் முழுவதும் இரவு பகல் வித்தியாசமின்றி தொடர்ச்சியாக பணிகள் நடைபெறுகிறது.
6. உலகளாவிய சேவை வசதிகளை வழங்குகின்றது.

மூலம்: இலங்கை தேசிய வரைபடத் தொகுப்பு - 1990

## திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி

திருகோணமலைத் துறைமுகம், வங்காள விரிகுடாவுக்குச் சேவையாற்றுகின்ற முக்கிய இயற்கைத் துறைமுகமாக அபிவிருத்தியடையும் வாய்ப்பைக் கொண்டுள்ளது. நாட்டின் தற்போதைய சூழலில் வடபகுதிமக்களுக்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாக திருகோணமலை காங்கேசன்துறை கப்பற் சேவை காணப்படுகின்றது.

ஏனைய துறைமுகங்களாக கிழக்கு கரையிலுள்ள ஒலுவில் துறைமுகம், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் உலலாசப் படகுத் துறை ஒன்றை கொண்டதும் வரலாற்றுப் புகழ் பெற்றதுமான காலி துறைமுகம், வடக்கே காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தரைமார்க்கம் சில சந்தர்ப்பங்களில் தடைப்படும்போது துறைமுகங்களுக்கூடாக பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. கொழும்பு-காங்கேசன்துறை, திருகோணமலை-காங்கேசன்துறை, கொழும்பு-திருகோணமலை ஊடாக மக்கள் பயணம் செய்வதோடு பொருட்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

## கால்வாய்ப் போக்குவரத்து

உள்நாட்டு நீர்ப்போக்குவரத்து பெருமளவில் நடைபெறாவிடினும் ஆறுகள், சிற்றாறுகள், களப்பு போன்றவற்றை அபிவிருத்தி செய்ததன் மூலம் ஒல்லாந்தர் கட்டிய கால்வாய்கள் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன. அந்தக் கால்வாய் மார்க்கம் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரை பரந்துள்ளது. ஆனால் தற்போது கெக்கித்த-நீர்கொழும்பு வரையான நீர்வழிப்பாதையே பயன்படுத்தப்படுகின்றது.


**செயற்பாடு**

1. இலங்கையின் பழைமையான நீர்வழிப்பாதையை மீண்டும் சீர்திருத்தினால் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.

## 8.3 இலங்கை தொடர்பாடல் சேவை

உலகில் அண்மைக்காலத்தில் மிகப் பெரிய மாற்றத்தை பெற்றுவரும் துறையாக தொடர்பாடல் சேவை காணப்படுகின்றது. இதன் தாக்கம் இலங்கையின் தொடர்பாடல் சேவைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் வர்த்தகம், போக்குவரத்து என்பவற்றை இணைப்பதாக தொடர்பாடல் காணப்படுகின்றது.

## இலங்கையின் தொடர்பாடல் துறை



## நாட்டின் அபிவிருத்திக்குச் சிறந்த செய்தித்தொடர்பு முறை

காலநிலை பற்றிய முன்னறிவித்தல்களும் நவீன விவசாய தகவல்களும் விவசாயத்தினை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு உதவியாக அமையும். முயற்சியாளர் தமது வர்த்தகப்பொருட்களைக் கால நேரத்திற்குச் சந்தைக்கு ஏற்ற முறையில் அனுப்பி வைப்பதற்கும் விரைவாக செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் மிக அவசியமாகிறது.

இன்றைய யுகம் கணனியுகமாகும். ஒவ்வொரு நாடும் தனித்த நாடாக இல்லாமல் உலகமயமாவதற்கு அடிப்படையாக இருப்பது கணிவலையமைப்பாகும். இணையம் (இன்ரநெற்) எனப்படும் இவ் வலையமைப்பு துரித தகவல் தொடர்பு சாதனமாக அண்மைக்காலங்களில் மிகப்பிரசித்தி பெற்றுள்ளது. செய்திப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்படுகின்ற மிகமுக்கிய சாதனமான செய்மதியைப் பயன்படுத்தி வலையமைப்பின் ஊடாக தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும், மின்அஞ்சல், தொலைநகல் போன்றவற்றின் ஊடாக ஒவ்வொருவருடனும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

## மாணவர்கள் அறிந்து கொள்ள சில தகவல்கள்

✦ இலங்கையில் 1858ம் ஆண்டு தொடக்கம் நிறையின்படி தபால் கட்டணத்தை அறவிடும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

- 1857ம் ஆண்டு தபால் முத்திரை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது
- 1858ல் தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1967ல் இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கபட்டது.
- இலங்கையில் 1979ல் முதன் முதலாக தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1992 முதல் தனியார் தொலைக்காட்சிச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டன.
- 1931இல் தினகரன், வீரகேசரி பத்திரிகைகள் ஆரம்பம்.
- 1832இல் 'கொழும்பு ஜேர்னல்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் தோற்றம்.
- 1862இல் 'லங்கா லோகய', 'லக்மினி பஹன' என்ற சிங்களப் பத்திரிகைகளின் தோற்றம்.
- 1864இல் 'உதயதாரகை' என்ற முதலாவது தமிழ்மொழிப் பத்திரிகை ஆரம்பம்.
- 1925இல் வானொலிச் சேவை மும்மொழிகளிலும் ஆரம்பம்.
- 1950இல் தேசிய திரைப்படத்தொழில் ஆரம்பம்.
- 1982இல் அஞ்சல் சேவை தனியார் துறையோடு இணைக்கப்பட்டது.
- செய்மதி தொடர்பு நிலையம் 107 நாடுகளோடு தொடர்புபடுத்தப் பட்டுள்ளமை.

- 1995-2005 காலப்பகுதிக்குள் இலத்திரனியல் தொடர்பு ஊடகங்களில் அரச, தனியார் துறையின் போட்டி காரணமாக ஏற்பட்ட வளர்ச்சி பாரிய அளவினதாகும்.

**செயற்பாடு:**

1. இலத்திரனியல் தொடர்பாடல் இலங்கை போன்ற நாடுகளுக்கு நன்மையானது / தீமையானது.
2. தொடர்பாடல் முன்னேற்றத்தை இலங்கையின் விருத்திக்குப் பயன்படுத்துவது கடினமானது / இலகுவானது.

போன்ற தலைப்புகளில் விவாதங்களை ஒழுங்கு செய்க.

**மதிப்பீடு**

1. இலங்கையின் வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பன மனித நடவடிக்கையின் விளைவாகச் செயற்படுகின்றன. இதை ஏற்றுக் கொள்வீரா? காரணங்களைத் தருக.
2. இலங்கையின் வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பனவற்றின் நவீன போக்கு பற்றிய பட்டியலொன்றைத் தருக.
3. இலங்கையின் வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பனவற்றின் வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள சமூக, கலாச்சார பிரச்சினைகளை விபரிக்குக.

இலங்கையில் குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படும் நீர், எரிபொருள், கழிவுநீர், வாயு, மணல் முதலிய பொருட்கள் பற்றி செய்திப் பத்திரிகைகள் நிகழ்காலத் தகவல்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இதுபற்றிய விடயங்களைச் சேகரிக்குக.